**AUDIO NEW TESTAMENT**
**FOR VISUALLY HANDICAPPED**




பார்வையற்ற நண்பர்களே!
இலவசமாக புதிய ஏற்பாடு
கேசட் கிடைக்கும்

*Languages :* Tamil, English, Hindi, Telugu, Malayalam & Kannada

**THE VOICE OF TRUTH**
**INTERNATIONAL ENGLISH MAGAZINE**



Avail Free World Class Engli
Magazine by
World Evangelism Team

WONDERFUL TOPICS ON CHRISTIAN LIVING, EVIDENCES, BIBLE CHARACTERS, WORSHIP, CHRISTIAN HOME, COMFORT AND REASSURANCE, CHURCH AND LOT MORE...

**கிருபையுள்ள வார்த்தை**
தமிழ் மாத இதழ்



உலகப்புகழ் பெற்ற போதகர்களின்
செய்திகளுடன் உங்கள் வாழ்வை
வளப்படுத்தும் கருத்துக்கள்.
இன்றே உங்கள் பிரதியை
எழுதிப் பெறுங்கள்.

**FREE BIBLE COURSE IN ENGLISH**

SYSTEMATICALLY STUDY THE BIBLE FROM YOUR HOME THROUGH CORRESPONDENCE COURSE IN ENGLISH, TO ENRICH YOUR SOUL. WRITE TO US WITH YOUR FULL ADDRESS AND E-MAIL.

**J.C. SCHOOL OF EVANGELISM**

ஊழிய பயிற்சி பெற இலவச அரிய வாய்ப்பு
இந்திய மற்றும் வெளிநாட்டு
ஆசிரியர்களால் நடத்தப்படுகிறது.
விபரங்களைப் பெற உடனே தொடர்பு
கொள்ளவும். செல் : 092 4421 4421

**கிருபையுள்ள வார்த்தை**

தமிழன் T.V.யில்
செவ்வாய் காலை 7.15 மணி
ஞாயிறு காலை 7.45 மணி
இமயம் T.V.யில் புதன் காலை 6.00 மணி




செய்தியாளர் : போதகர். பிலேமோன்ராஜா, M.A., M.TH.,
(Director - J.C. Choate School of Evangelism)

**இலவச பைபிள் பாடங்கள்**



வேதாகமப் பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்பியும் தருணம் கிடைக்காத வர்களுக்கு, வீட்டிலிருந்தே அஞ்சல் வழியில் பைபிள் பாடங்களைப் படித்து Certificate பெற அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. உடனே உங்கள் தெளிவான முழு முகவரியுடன் எழுதவும்.

WRITE TO US
WITH YOUR FULL ADDRESS TO RECEIVE MORE LESSONS AND OTHER FREE STUDY MATERIALS

P.C. PHILEMON RAJA, M.A., M.Th.,
DIRECTOR - J.C. SCHOOL OF EVANGELISM
P. BOX 15, ARASARADI,
MADURAI - 625 016.
INDIA. PH : 092 4421 4421
E-MAIL US : PCPR@GRACIOUSWORD.ORG
VISIT US AT WWW.GRACIOUSWORD.ORG


# ஏன் தேவனைத் தேட வேண்டும்?

## WHY SEEK GOD?

- J.C. Choate (USA)



வாசகர்கள் அனைவருக்கும் இயேசுஆண்டவரின் தூய நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அற்பகால ஜீவியத்தை வெகுமதியாய் பெற்றுக்கொண்டேன்; அலட்சிய மாய் செலவு செய்ய அனுமதிதான் எனக்கு இல்லை" என்று ஒரு பக்தன் பாடுகின்றார். இப்படிப் பட்ட வாழ்வில் தேவனையும், அவருடைய வேதத்தையும் தேடுவதைத் தவிர வேறென்ன வேலை நமக்கு?

தற்கால உலகில் தேவ நம்பிக்கைக்கு சவால்விடப்படுகிறது. குறிப்பாக, பள்ளியிலும், கல்லூரிகளிலும் நம் பிள்ளைகள் படிக்கும் பாடங்களில், "குரங்கிலிருந்து மனிதன் வந்தான்" என்றும் "ஒரு செல் அமீபாவிலிருந்து வந்தான்" என்றும் கற்றுக்கொள்கின்றனர். திருச்சபையின் முன்னோடிகளோ, சிறுவர் வகுப்பு பொறுப்பாளர்களோ, ஏன், கிறிஸ்தவப் பெற்றோர்களும்கூட இதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. கிறிஸ்தவ கல்லூரி முதல்வர்களே, பேராசிரியர்களே, பள்ளி ஆசிரியப் பெருமக்களே உங்களுடைய விசுவாசம், பிள்ளைகட்கு வேதவசன ஆதாரத்துடன் போதிக்கப் பட வேண்டுமல்லவா? இதைச் செய்ய இக்கட்டுரை உதவட்டும்.

"புத்தர், இயேசு, காந்தி" என்று மனிதன் பாராட்டுகின்றனர். புத்தரும், காந்தியும் சிறந்த மகான்கள்; ஆனால் ஒரு தாய்க்கும், தந்தைக்கும் பிறந்தவர்கள். ஆனால், இயேசு வோ பரிசுத்த ஆவியானவருக்கும் ஒரு கன்னிக்கும் மட்டுமே பிறந்தவர். அப்படியானால், புத்தரும் காந்தியும்,அவர்களுடன் இயேசுவும் சமமானவரா? சிந்திப்போம்!

திருமறை (பைபிள்) சொல்கிறது, "கிறிஸ்துவின் முன்பு முழங்கால்கள் யாவும் முடங்க வேண்டும்". ஆனால், அப்படிப்பட்ட வல்லமையான நாமத்திற்கு முன், திருச்சபைக் கூட்டங்களிலோ, வீட்டு ஜெபத்திலோ நம்மில் சிலருக்கு முழங்கால்படிவது கௌரவ குறைச்சலாய் உள்ளது. இப்படிப்பட்ட ஜீவாதிபதியைப் பற்றிய சரியான உணர்வு வேண்டும்.

நம் வாழ்வில், எது சரி? எது தவறு? என்று தீர்மானிக்க தேவனையும் அவரது திருமறையையும் அனுமதிக்கின்றோமா? வீட்டை விட்டு வெளியில் செல்லும்போது பெற்றாரின் அனுமதி பெற்று செல்கிறோம். ஆனால், நம்முடைய தந்தையாம் தேவனிடம் அனுமதிப்பெற்று எதையும் செய்கின்றோமா?

### தேவனைத் தேட வேண்டும்! ஏன்?

### 1. அவர் இருக்கிறார்!

மதியற்றவன், அதாவது சாட்சியங்கள் இருந்தும் தன் கண்களை திறக்காத மதியீனமுள்ளவன், தேவன் இல்லை என்கிறான் (சங்.53:1).

ஆனால், ரோமர் 1:19,20 ல் "காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்" என்கிறது திருமறை.

மிகுந்த ஆழ்ந்த அறிவு, சிந்திக்கும் திறன்கொண்ட எந்த மனிதனும் தேவன் உண்டென நம்புவான்.

உதாரணம் : புகைப்படக்கருவி: ஒரு கேமிராவை எடுத்துக்கொண்டால், அதில் லென்ஸ், மூடி, பேட்டரி, பிலிம் என்று எல்லாம் சேர்ந்து இயங்குகிறது. இது எதைக் காட்டுகிறது? அதை உண்டாக்கிய (அல்லது) ஒழுங்காக வடிவமைத்த ஒருவர் இருக்கிறார், என்று கூறுகிறதே! அப்படியானால் உலகையும், நம்மையும் படைத்தவர் இருக்கிறார்! எனவே அவரைத் தேட வேண்டும்!

ஒருவேளை, அந்தப் புகைப்படக் கருவி நன்றாக இயங்கவில்லை (அல்லது) கீழே

விழுந்து நொருங்கிவிட்டது என்றால், பயனற்ற நிலையில் உள்ள அந்த கேமிராவை ஒருவரும் உண்டாக்கவில்லை எனக் கூற முடியுமா? அதேப்போல், சில மனிதர்கள் சரியாக இல்லை (அல்லது) சிலருக்கு/பலருக்கு, சில அல்லது பல இயற்கை தீமைகள்/நஷ்டங்கள் ஏற்படுவதினால், "கடவுள் என்று ஒருவர் இருந்தாரானால், இதை தடுத்திருக்கக் கூடாதா? எனவே கடவுள் இல்லை!" என்பது மதியீனம் (சங்.14:1).

உங்கள் வீட்டில் அப்பா (அல்லது) தாத்தா காலத்து பொருட்கள் இருக்கிறதே (கட்டில், பீரோ). அவை இத்தனை ஆண்டில் இன்னொன்றதை பெற்றதா? ஆனால் ஒரு மனிதன் பெறுகிறான்! அதனால், நாம் ஒன்றும் மற்றதில் (ஒரு பொருளிலிருந்து) இருந்து உண்டாக்கப் படவில்லை.

## 2. அவர் படைத்தார்:

இந்த சர்வ சஞ்சாரம் (உலகம், வானம், அண்டம்) இருக்கிறதே! எனவே இதை படைத்தவர் இருக்கின்றார். இது தற்செயலாக ஏற்படவில்லை. இது படைக்கப்பட்டது, உத்தரவிடப்பட்டது, வடிவமைக்கப்பட்டது (ஆதி.1,2). இதை தேவனே படைத்தார். (உம்) மனிதனை எடுத்துக்கொள்வோம்! நம் கண்கள் எவ்வளவு அருமையான புகைப்படக் கருவி தெரியுமா? நம்முடைய கையைப் போன்ற அருமையான இயந்திரம் வேறு இல்லை! நம் இருதயம் போன்ற உந்து குழாய் (pumping organ) வேறு எதுவுமே இல்லை. நாம் பிறந்த நாளிலிருந்து நம்முடைய இருதயம் இரத்தத்தை வெளியேற்றிக் கொண்டே இருக்கிறது. தாவீது, சங்கீதம் 139:14ல், "நான் பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டேன்" என்ற கூறுகிறார். மேலும், ஆதி.1:26ன்படி, மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டான்.

## 3. மனிதனுக்கு வெளிப்படுத்தலைக் கொடுத்துள்ளார்:

மனிதன் எங்கிருந்து வந்தான்? ஏன் உலகில் இருக்கிறான்? எங்கு போகப் போகிறான்?

உங்களுக்கு ஒரு பார்சல் வருகிறது; அதில் ஒரு அழகிய, புதிய கருவி ஒன்று உள்ளது. அதை பயன்படுத்துவது எப்படி என்றும், அது எங்கிருந்து அனுப்பப்பட்டது என்றும் குறிப்பே இல்லாமல் இருந்தால், அனுப்பியவரைக் குறித்து என்ன நினைப்பீர்கள்?

1. அவர் முழுவதும் சொல்லுமுன் மரித்துவிட்டார். (அல்லது)

2. இதை அனுப்பியவர் மூளைக்கோளாறு உள்ளவர் என்றுதானே எண்ணுவீர்கள்!

அப்படியானால், தேவனும் நம்மை படைத்துவிட்டு, அப்படியே விட்டுவிடவில்லை. மாறாக, நம்முடைய வாழ்வில் எதிர்காலம் பற்றி, நிகழ்காலத்தில் என்ன செய்யவேண்டும் மற்றும் நம்மைப் படைத்தது யார்? என்றும் கூறியுள்ளார்! எனவே அவரின் வெளிப்பாடாகிய பைபிளை நாம் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டும்.

ஏதோ சில புத்தகம் கூறுவது போல, "மனிதன் கற்காலத்தில் இருந்தான்", "சைகையில் பேசினான்", "கத்தினான், பிறகு பேசினான்" என்பதெல்லாம் மூடர்களின் கூற்று! மாறாக, தேவன் ஆதாமைப் (மனிதனை) படைத்து, தான் படைத்தவைகட்கு ஆதாமை பெயரிட வைத்தார். அவர் ஒன்றும் பேசாத மனிதனைப் படைக்கவில்லை (ஆதி.2:19).

எனவே மனிதனைப் பற்றியும் – நம் ஆராதனை, இரட்சிப்பு, பரலோகம், நரகம், நியாயத்தீர்ப்பு, திருமணம், பிள்ளை வளர்ப்பு, சம்பாதிப்பது, வேலை இவை எல்லாவற்றையும் பற்றி நமக்கு எந்த அளவிற்கு தேவையோ, அந்த அளவிற்கு திருமறையில் வெளிப்படுத்தியுள்ளார். எனவே பைபிளை படியுங்கள் பயிற்சி செய்யுங்கள் (2 தீமோ.3:16,17).

நம்மால், நம்மை நாமே வழிநடத்த முடியாது (எரே.10:23); தேவனே வழிநடத்த வல்லவர்; மனிதனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல; மேலும் வேத அறிஞர்களோ, மத போதகர்களோ மட்டும் நம்மை முற்றிலுமாக, சரியாக வழி நடத்த முடியாது. "மனிதனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்".

எனவே மனிதப் போதனைகளைப் பற்றி, பைபிள் துணைக்கொண்டு சீர்தூக்கிப் பார்த்து, பைபிள் வழியிலே மட்டும் நாம் நடக்க வேண்டும். ஏனெனில், நம் விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்திலிருந்து வர வேண்டும் (ரோமர் 10:17).

வேதத்தை நிறையவே படிக்கலாம்; தியானிக்கலாம்; அதைக்குறித்து பேசலாம்; அது முழுபயனல்ல! மாறாக, அதில் படித்தவைகளை பயன்படுத்தி தினமும் வாழ்வை பக்குவப்படுத்தி, பரலோகம் அடைய வேண்டும்?

## 4. நம்மிடம் எதிர்பார்க்கிறார்....

தேவன் நம்மிடம் சில காரியங்களை எதிர்பார்க்கிறார்

ä விசுவாசம்: எபி.11:6ன்படி தேவனில் விசுவாசம் கொள்ள வேண்டும்.

''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்''

ä கீழ்படிதல்: எபி.5:9 ன்படி, ''தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி''. (1 யோ.4:8)

ä அன்பு: தேவனில் அன்பு செலுத்த வேண்டும்; அதை விட்டு, சும்மா குறை சொல்லிக் கொண்டே இருக்கக் கூடாது; முறுமுறுக்கக் கூடாது. (உம்) ஏன் தான் கடவுளைத் தேடினால் ரொம்ப சோதிக்கிறாரோ?

## 5. கடைசியாக கணக்கு கொடுக்கனும்:

எபி. 9:27ன்படி, கணக்கு கேட்க வருகிறார்! கிறிஸ்தவன் எந்த தொழிலிலும், தான் செய்யும் செலவுக்கும், கணக்குப் புத்தகத்திற்கும் நேர்மையாக இருக்கனும். சிலர் சுனாமிக்கு வந்த உதவியை எல்லாருக்கும் அள்ளிக் கொடுக்கின்றனர். இதை தேவன் விரும்பவில்லை. என்ன கூறி, எதற்கு பணம் பெற்றோமோ, அதற்கே செலவு செய்யனும்! கவனம்!

ரோமர் 14:12ன்படி நம்மில் ஒவ்வொருவரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்! காணிக்கை கணக்கானாலும், கம்பெனி கணக்கானாலும், நம் வீட்டுக் கணக்கானாலும் தேவன் கவனிக்கிறார். சிலர் பயணப்படி (TA) உண்டு என்பதாலும், மற்ற படிகள் (Allowance) உண்டு என்பதாலும், செய்யாத செலவிற்கு ஆதாரங்கள் (Bill) தயார் செய்து வாங்குவார்கள். கேட்டால், ''அது என் பணம் தானே! அது உண்மைதான்!'' என்றெல்லாம் சொல்லுவார்கள். ஆனால், நாம் செலவு செய்யாத பணத்தை வாங்கினால் (claim) தேவன் கணக்கு கேட்பார் (1 கொரி.4:2).

மனைவியிடம் சொல்வது ஒன்று, செய்வது வேறொன்று.

கணவனிடம் சொல்வது ஒன்று, செய்வது மற்றொன்று.

பெற்றாரிடம் பணம் கேட்டு வாங்கும் காரணம் வேறு; ஆனால், வாலிபப் பிள்ளைகள் செலவு செய்வது வேறு காரியத்திற்கு. தேவன் பார்க்கிறார்!

எனவே உங்கள் வாழ்வு மலர, கனி கொடுக்க, பயன்பட தேவனைத் தேடுங்கள். தேவன் நம்மோடிருக்க, உடனே ஜெபித்து இதில் சொல்லப்பட்டவற்றுடன் பயிற்சி செய்ய வேண்டும்.

**மேலும் அறிய : ஆவிக்குரிய புத்தகங்களை இலவசமாக பெறுவதற்கு பின்பக்கமுள்ள முகவரிக்கு உங்கள் தெளிவான முகவரியுடன் எழுதவும்.**

**AUDIO NEW TESTAMENT**

**FOR VISUALLY HANDICAPPED**




**பார்வையற்ற நண்பர்களே!**

**இலவசமாக புதிய ஏற்பாடு**

**கேசட் கிடைக்கும்**

*Languages :* Tamil, English, Hindi, Telugu, Malayalam & Kannada

**THE VOICE OF TRUTH**

**INTERNATIONAL ENGLISH MAGAZINE**



Avail Free World Class English Magazine by World Evangelism Team

WONDERFUL TOPICS ON CHRISTIAN LIVING, EVIDENCES, BIBLE CHARACTERS, WORSHIP, CHRISTIAN HOME, COMFORT AND REASSURANCE, CHURCH AND LOT MORE...

**கிருபையுள்ள வார்த்தை**

**தமிழ் மாத இதழ்**



உலகப்புகழ் பெற்ற போதகர்களின் செய்திகளுடன் உங்கள் வாழ்வை வளப்படுத்தும் கருத்துக்கள். இன்றே உங்கள் பிரதியை எழுதிப் பெறுங்கள்.

**FREE BIBLE COURSE IN ENGLISH**

SYSTEMATICALLY STUDY THE BIBLE FROM YOUR HOME THROUGH CORRESPONDENCE COURSE IN ENGLISH, TO ENRICH YOUR SOUL WRITE TO US WITH YOUR FULL ADDRESS AND E-MAIL.

**J.C. SCHOOL OF EVANGELISM**

ஊழிய பயிற்சி பெற இலவச அரிய வாய்ப்பு இந்திய மற்றும் வெளிநாட்டு ஆசிரியர்களால் நடத்தப்படுகிறது. விபரங்களைப் பெற உடனே தொடர்பு கொள்ளவும். செல் : 092 4421 4421

**கிருபையுள்ள வார்த்தை**

**தமிழன் T.V.யில்**

செவ்வாய் காலை 7.15 மணி

ஞாயிறு காலை 7.45 மணி

**இமயம் T.V.யில்** புதன் காலை 6.00 மணி




செய்தியாளர் : போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.TH.,
(Director - J.C. Choate School of Evangelism)

**இலவச பைபிள் பாடங்கள்**



வேதாகமப் பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்பியும் தருணம் கிடைக்காதவர்களுக்கு. வீட்டிலிருந்தே அஞ்சல் வழியில் பைபிள் பாடங்களைப் படித்து Certificate பெற அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. உடனே உங்கள் தெளிவான முழு முகவரியுடன் எழுதவும்.

WRITE TO US
WITH YOUR FULL ADDRESS TO RECEIVE MORE LESSONS AND OTHER FREE STUDY MATERIALS

P.C. PHILEMON RAJA, M.A., M.Th.,
DIRECTOR - J.C. SCHOOL OF EVANGELISM
P. BOX 15, ARASARADI,
MADURAI - 625 016.
INDIA. PH : 092 4421 4421
E-MAIL US : PCPR@GRACIOUSWORD.ORG
VISIT US AT WWW.GRACIOUSWORD.ORG


# நாங்கள் ஏன் தேவனை நம்புகிறோம்?

## WHY WE BELIEVE IN GOD? *- J.C. Choate (USA)*



உங்கள் அனைவருக்கும் என் நன்றி! மேலும், இயேசு கிறிஸ்துவின் பெயரில் உங்களை வாழ்த்துகிறேன்.

இன்றைய உலகம் முரண்பட்ட நிலையில் உள்ளது. ஒரு பக்கத்தில், ஒரு குறிப்பிட்ட சதவீத மக்கள், தேவன் (கடவுள்) என்று ஒருவர் உண்டு என்பதையே நம்பாமல் உள்ளனர். அவர்கள் "தேவன் (கடவுள்) இருக்கிறார்" என்பதை நம்ப மறுக்கிறார்கள்.

இந்த உலகம் ஒரு விபத்தினால் உண்டானது என்றும், மனிதன் தனக்குக் கீழான ஒரு ஜந்துவில் இருந்து மனிதன் வந்தான் என்றும் இவர்கள் கூறுகின்றனர். மனிதனுக்கு மேல் யாரிடமும் கணக்கு கொடுக்க வேண்டியதில்லை (அவசியமில்லை) என்று இவர்கள் நம்புகின்றனர். மற்றொரு பக்கத்தில், ஒரு குறிப்பிட்ட பெரிய சதவீத மக்கள், உலகில் இன்று ஒன்று (அல்லது) நிறைய கடவுள்கள் உள்ளன என நம்புகின்றனர். இதில் பெரும்பான்மையோர், உருவங்களும், சிலைகளும் தங்கள் தெய்வங்களை வெளிப்படுத்துவதாக நம்புகின்றனர். இவையெல்லாவற்றிலும் நீங்கள் எப்பக்கம் நிற்கிறீர்கள்? நீங்கள் எதை நம்புகிறீர்கள்?

நான் ஒரு கிறிஸ்தவன் மற்றும் நான் கிறிஸ்துவினுடைய சபையின் ஓர் அங்கத்தினர். என்னுடைய சகோரர்களும், சகோதரிகளும் (திருச்சபையில்) தேவனில் நம்பிக்கை வைத்துள்ளோம். ஒரே ஒரு உண்மையுள்ள, ஜீவனுள்ள தேவன் (கடவுள்) இருக்கிறார் என்றும், அவரே எல்லாவற்றையும் படைத்தார் என்றும், அவர் எல்லா வல்லமையும், எல்லாம் அறிந்தவரும், எல்லாவற்றையும் பார்க்கிறவராயிருக்கிறாரென்றும் நாங்கள் நம்புகின்றோம். மேலும் அவர் நித்தியமானவர், ஆவியாயிருக்கிறார், மேலும் எங்கும் உள்ளார் என்றும் நம்புகிறோம். அவரில் நம்பிக்கை வைக்கும்படி உங்களை உற்சாகப்படுத்த நாங்கள் விரும்புகிறோம்.

நாங்கள் ஏன் தேவனை (கடவுளை) நம்புகிறோம் என்று நீங்கள் ஒருவேளை ஆச்சரியப் படலாம். எங்களுடைய நம்பிக்கையை கேள்வி கேட்க உங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஆனபடியால், நாங்கள் ஏன் தேவனை நம்புகிறோம் என்று உங்களுக்கு சில காரணங்களைச் சொல்ல விரும்புகிறோம்.

**முதலாவது, நாங்கள் தேவனை நம்புகிறோம், ஏனெனில், அவர் இருக்கிறார்; மற்றும் எல்லாவற்றையும் படைத்தவர் என்று நம்புவது தர்க்க சாஸ்திர கொள்கைக்கு** (logical) உட்பட்டதாயுள்ளது. இந்த பூமி எல்லா உயிரினங்களுடன் இருக்கிறது என்ற ஒரு உண்மையே, யாரோ ஒருவர் இதற்குக் காரணம் என்று வெளிப்படுத்துகிறது. எப்படி ஒரு புத்தகத்திற்கு ஒரு ஆசிரியர் உண்டு போலும், ஒரு வீட்டை கட்டுகிறவர் இருப்பது போலும், ஒரு ஊர்தியை (உயசு) கண்டு பிடித்தவர் இருப்பது போலும், இந்த உலகமும் அதில் உள்ளனவும் உண்டாக்கப்பட்டன. திருமறை(பைபிள்)யின் முதல் வாக்கியத் தில், "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி.1:1) என்று கூறுகிறது.

**இரண்டாவது, பரலோக தேவனாகிய எல்லாவற்றையும் படைத்த தேவனை நாங்கள் ஏன் நம்புகிறோமெனில், இவ்வுலகில் உள்ள பகுத்தறிவுள்ள வாழ்வினிமித்தமே!** எல்லா மிருக மற்றும் தாவர ஜீவியங்களுடன் மட்டும் இந்த பூமி இராமல், மனிதனும் இப்பூமியில் வாழுகிறான்; மேலும் மற்ற எல்லாவற்றுடனும் ஒப்பிடும்போது அவன் மிகச் சிறந்த ஒரு சிருஷ்டியாய் இருக்கிறான். மனிதர்களுக்கு யோசிக்கவும், ஆராய்ந்து அறியவும் ஆற்றல் உள்ளது. அது மட்டுமின்றி, காலங்களின் ஊடே, மனிதன் தன் அறிவிலும் வளர்ச்சி யடைந்துள்ளான். அப்படியானால், அவனால் கற்றுக்கொள்ளவும், அவனுடைய முன்னோர் களின் அறிவின்மேல் தொடர்ந்து கட்டவும் திறமை உடையவன். அப்படியானால், ஒரு அறிவில் சிறந்த படைப்பாளி தான் அவனைப் படைத்திருக்க வேண்டும். ஆனால் ஒரு மிருகத்தின் வாழ்வைப் பாருங்கள். அது ஆரம்பமுதல் ஒரே மாதிரிதான் மாறாமல் உள்ளது. அப்படி யானால் ஒரு ஞானமுள்ள படைப்பாளிதான் மிருக ஜீவன்களையும் மற்ற எல்லாவற்றையும் மனிதனுடைய பயன்பாட்டிற்காய் அதே நிலையில் வைத்துள்ளார். நாம் ஆதியாகமம் 1 ம் அதிகாரத்தில் பார்த்தோமானால், தேவன் வானத்தையும், பூமியையும் படைத்தார் என்றும், தொடர்ந்து வந்த நாட்களில் அவர் பூமியில் ஊர்வன, ஆகாயத்தில் பறப்பன, கடலில் நீந்துவன போன்ற எல்லாவற்றையும் படைத்தார் என காண்கிறோம். பின்பு கடைசியில் அவர் மனிதனையும், மனுஷியையும் படைத்தார். பின்பு "பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி.1:28) என்று வாசிக்கிறோம்.

**மூன்றாவதாக, மனிதன் இரு நிலைகளில் இருப்பதினால், தேவனே அவனைப் படைத் தார் என்று நாங்கள் நம்புகிறோம்.** அவனுக்கு சரீரப் பிரகார நிலையும், ஆவிக்குரிய நிலையும் உண்டு. "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" (ஆதி.1:27) என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் நாம் வாசிக்கையில் "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதி.2:7) என்று பார்க்கிறோம். இதைப் புரிந்துகொள்ள, தேவன் ஆவியாயிருக்கிறார் என்ற கருத்தை நாம் அறிந்திருக்க வேண்டும் (யோ.4:24).

மேலும், தேவன் மனிதனை தன்னுடைய சாயலில் படைத்தார் என்றால், தேவன் தன்னைப்போலவே மனிதனுக்கு ஏதோ ஒன்றைக் கொடுத்திருக்கிறார்; அதாவது அவர் மனிதனுக்குள் எப்பொழுதுமே ஒரு உள்ளான வனை (அதாவது) ஒரு ஆவியை, ஒரு ஆத்துமாவை வைத்துள்ளார். சரீரத்தை யும், ஆவியையும் பற்றி பேசும்போது ஞானி சாலொமோன் சொல்லுகிறார், "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத் திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை" (பிரசங்கி 12:7).

அதாவது, மரித்த சரீரம் இந்த பூமியில் மண்ணுக்கு திரும்பி, மனிதனுடைய ஆவியானது அதைக் கொடுத்த தேவனிடமும் திருப்பிப் போகிறது. இதுவே, மனிதன் தேவனை நம்புவதற்கான மற்றுமொரு ஆதாரம். எல்லாமே முடிந்து போகும்படி, யார் தான் மரிக்க விரும்புவார்கள்? தேவன் இல்லை என்பவர்களுடைய நிலை இதுதான்! ஆனால், தேவனை நம்புகிறவர்களுக்கோ, வாழும்படி இவ்வாழ்வு மட்டுமன்றி, சரீர மரணத்திற்கு பின் அவனுடைய ஆவி (அல்லது) ஆத்துமா எப்பொழுதுமே வாழ்ந்திருக்கும்.

"இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளி லுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்க ளாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான். 5:28,29). என்று கிறிஸ்து கூறினார்.

நான்காவது, தேவனுடைய கிரியைகளில் உள்ள ஒற்றுமையின் காரணமாக நாங்கள் தேவனை நம்புகிறோம். காலங்கள், தட்ப வெட்பம், தாவரங்களின் வாழ்வு, கடலினங் களின் வாழ்வு மற்றும் மனித வாழ்வு எல்லாம் அருகேயே அமைந்திருந்து, ஒன்று மற்றொன் றிற்கு உதவிக்கொண்டுள்ளது.

தங்களுடைய நிலைத்திருக்கலுக்காய் ஒன்று மற்றொன்றை சார்ந்துள்ளன. ஆனால் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைப் பற்றி என்ன? அவை அனைத்தும் சரியான தொலைவிலே வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, சூரியன் கொஞ்சம் அருகில் வந்தாலும், அதிக வெப்பத்தினால் இப்பூமி முழுமையும் எரிந்து சாம்பலாகியிருக்கும். மேலும், சூரியன் இன்னும் கொஞ்சம் தொலைவில் இருந்திருந் தாலும், இப்பூமி உறைந்து போயிருக்கும். தேவனுடைய (கடவுள்) படைப்பு எவ்வளவு ஆச்சரியமானது பார்த்தீர்களா!

வெகு நாட்களுக்கு முன், சங்கீதக்காரன் தாவீது,

1. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவ ருடைய கரங்களின் கிரியையை அறிவிக் கிறது.

2. பகலுக்கு பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது.

3. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப் படுவதுமில்லை.

4. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்.

5. அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரம சாலியைப் போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது" (சங்.19:1–5) என்று சொல்லுகிறார்.

**மேலும் அறிய : ஆவிக்குரிய புத்தகங்களை இலவசமாக பெறுவதற்கு பின்பக்கமுள்ள முகவரிக்கு உங்கள் தெளிவான முகவரியுடன் எழுதவும்.**

**AUDIO NEW TESTAMENT**

**FOR VISUALLY HANDICAPPED**




பார்வையற்ற நண்பர்களே!

இலவசமாக புதிய ஏற்பாடு

கேசட் கிடைக்கும்

*Languages :* Tamil, English, Hindi, Telugu, Malayalam & Kannada

**THE VOICE OF TRUTH**

**INTERNATIONAL ENGLISH MAGAZINE**

Avail Free World Class Engli
Magazine by
World Evangelism Team



WONDERFUL TOPICS ON CHRISTIAN LIVING, EVIDENCES, BIBLE CHARACTERS, WORSHIP, CHRISTIAN HOME, COMFORT AND REASSURANCE, CHURCH AND LOT MORE...

**கிருபையுள்ள வார்த்தை**

**தமிழ் மாத இதழ்**



உலகப்புகழ் பெற்ற போதகர்களின் செய்திகளுடன் உங்கள் வாழ்வை வளப்படுத்தும் கருத்துக்கள். இன்றே உங்கள் பிரதியை எழுதிப் பெறுங்கள்.

**FREE BIBLE COURSE IN ENGLISH**

SYSTEMATICALLY STUDY THE BIBLE FROM YOUR HOME THROUGH CORRESPONDENCE COURSE IN ENGLISH, TO ENRICH YOUR SOUL. WRITE TO US WITH YOUR FULL ADDRESS AND E-MAIL.

**J.C. SCHOOL OF EVANGELISM**

ஊழிய பயிற்சி பெற இலவச அரிய வாய்ப்பு

இந்திய மற்றும் வெளிநாட்டு

ஆசிரியர்களால் நடத்தப்படுகிறது.

விபரங்களைப் பெற உடனே தொடர்பு

கொள்ளவும். செல் : 092 4421 4421

**கிருபையுள்ள வார்த்தை**

தமிழன் T.V.யில்

செவ்வாய் காலை 7.15 மணி

ஞாயிறு காலை 7.45 மணி

இமயம் T.V.யில் புதன் காலை 6.00 மணி




செய்தியாளர் : போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.TH.,
(Director - J.C. Choate School of Evangelism)

**இலவச பைபிள் பாடங்கள்**



வேதாகமப் பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்பியும் தருணம் கிடைக்காத வர்களுக்கு. வீட்டிலிருந்தே அஞ்சல் வழியில் பைபிள் பாடங்களைப் படித்து Certificate பெற அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. உடனே உங்கள் தெளிவான முழு முகவரியுடன் எழுதவும்.

WRITE TO US
WITH YOUR FULL ADDRESS TO RECEIVE MORE LESSONS AND OTHER FREE STUDY MATERIALS

P.C. PHILEMON RAJA, M.A., M.Th.,
DIRECTOR - J.C. SCHOOL OF EVANGELISM
P. BOX 15, ARASARADI,
MADURAI - 625 016.
INDIA. PH : 092 4421 4421
E-MAIL US : PCPR@GRACIOUSWORD.ORG
VISIT US AT WWW.GRACIOUSWORD.ORG


# இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது!

NO MAN CAN SERVE TWO MASTERS



- J.C. Choate (USA)

நாம் இரண்டில் ஒன்று தேர்வு செய்ய வேண்டிய இரு எஜமான்களைப் பற்றிப் பார்ப்போம். இன்று உலகில் அதிகமான பேர் பின்பற்றக்கூடிய அந்த நபரைப் (எஜமான்) பற்றி நாம் முதலாவது பார்ப்போம்; ஆம்! அது சாத்தான் தான்.

வேத வசனத்தில் சாத்தானானவன் பிசாசு என்றும், எதிராளியானவன் என்றும் (1பேதுரு 5:8), பெயெல்செபூல் என்றும் (மாற்கு 3:22), சோதனைக்காரன் (மத்.4:3), பொல்லாங்கன் (1யோவான் 2:14), மோசம் போக்குபவன் (வெளி.12:9), பொய்யின் பிதா (யோவான் 8:44), உலகத்தின் அதிபதி (யோவான் 14:30) மற்றும் பிரபஞ்சத்தின் தேவன் (2கொரி.4:4) என்றெல்லாம் அழைக்கப்படுகிறான்.

சாத்தான் எப்பொழுதுமே தீய, தவறான, தேவனுக்கு எதிரான, மோசமான, இவ்வாழ்வின் உலகமயமான, மாம்சகிரியை சம்பந்தமான மற்றும் பாவமான காரியங்களுடன் தொடர்புடையவன். அவன் ஏமாற்றி, தவறாக வழிநடத்தி, பொய்ச் சொல்லி, கொலை செய்து மற்றும் அழித்துக் கொண்டிருக்கிறான்.

அவனைப் பற்றிய நல்ல விஷயம் எதுவும் கிடையாது. அவன், தேவனாகிய பிதாவையும் குமாரனாகிய கிறிஸ்துவையும் எதிர்க்கிறான். தன்னால் முயன்ற எந்த ஆத்துமாவையும் அவன் தேடி அழிக்க நினைக்கிறான். அவனுடைய தந்திரமான செயல்களினாலும், உலக மாம்சீக மயக்கத்தினாலும் அவனால் உலகம் முழுவதிலும் அநேகரை ஆட்கொண்டு கட்டுப்படுத்த முடிகிறது. மதத்தின் மீது ஆர்வமுள்ளவர்கட்கு அவன் இவ்வுலக மதங்களை அடையாளம் காட்டுகின்றான். கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிறவர்களிடம் அவன், எந்த பெயரை அவர்கள் உடையவர்களாயிருப்பினும் பரவாயில்லை. ஒரு சபை மற்ற சபையைப் போல நல்லதுதான். பரலோகம் செல்ல பல வழிகள் உண்டு என்றெல்லாம் கூறுகிறான்.

மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை ஆகியவைகளின் மூலம் – சாத்தான் தொடர்ந்து ஜனங்களை சோதிக்கிறான். "ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்." (1யோ. 2:16) என்று யோவான் எழுதுகிறார். மாம்ச இச்சையை பற்றி பேதுரு கூறும்பொழுது, "பிரியமானவர்களே அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, " (1பேதுரு 2:11) என்று கூறுகிறார்.

மேலும், "துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்." (ரோமர் 13:14) என்று பவுல் கூறுகிறார். மற்றும் கலாத்தியர் 5:19–21ல் "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,

விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள்,

பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப் பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்று பவுல் கூறுகிறார்.

அடுத்ததாக, கண்களின் இச்சை என்று ஒன்று உள்ளது. ஞானியாகிய சாலமோன், "பாதாளமும் அழிவும் திருப்தியாகிறதில்லை; அதுபோல மனுஷனுடைய கண்களும் திருப்தி யடைகிறதில்லை." (நீதி.27:20) என்று கூறுகிறார். அடுத்ததாக, இங்கே, வீணான வாழ்வின் மகிமை அல்லது பெருமை உள்ளது. "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.

ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." (யாக்.4:6–7) என்று யாக்கோபு எழுதுகிறார். மாம்ச இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றைப் பற்றி நாம் விவாதித்த பிறகு, "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப் பான்." (1யோவான் 2:17) என்று யோவான் கூறுகின்றார்.

இப்பொழுது சொல்லுங்கள்; சாத்தான் உங்கள் எஜமானாக இருக்க விரும்புகிறீர்களா? ஆனால் தவிர்க்க முடியாமல் அவன் உங்கள் எஜமானாக மாறிவிட்டான். கேள்வி இதுதான், அவன் உங்கள் எஜமானாகவே தொடரும்படி நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படி இல்லையெனில், உங்களுடைய மாற்று வழி என்ன?

சாத்தானுக்கு மறுமுனையிலே (எதிராக) அங்கு கிறிஸ்து இருக்கிறார். அவர் தேவனிடத்தில் இருந்து வந்தவர். அவர் தேவனுடைய குமாரன். உலகத்தின் பாவங்களுக் காக அவர் சிலுவையில் மரித்தார். அவர் மனிதனுக்கான இரட்சகர். அவர் சபையை – அவருடைய (தேவன்) குடும்பத்தை கட்டினார். மேலும் அதற்கு தலையாக இருக்கிறார். இந்த உலகத்தில் உள்ள எல்லா நன்மைகளையும், சரியானவைகளையும் அவர் அடையாளப் படுத்துகிறார். உலகில் உள்ள எல்லா தவறானவை மற்றும் தீமைகளை அவர் எதிர்க்கிறார். இவர், சாத்தானுடைய முதன்மையான எதிரி. மேலும்ட இவர் ஒருவரால் தான் அவனை வீழ்த்த முடியும். "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ் செய்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்த படியினால் பாவஞ்செய்ய மாட்டான்." (1யோ.3:8,9) என்று அப்போஸ்தலனாகிய யோவான் நினைவு படுத்துகிறார். மேலும், "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களா யிருக்க, அவரும் அவர்களைப்போல் மாம்சத்தை யும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்." (எபி.2:14,15) என்று எபிரெய எழுத்தாளர் கூறுகிறார்.

ஆனால், உலகப்பிரகாரமான, தேவபக்தியற்ற, பாவமுள்ள வாழ்க்கை வாழ்ந்து, மாம்ச கிரியைகளில் ஈடுபடும் யாரானாலும், சாத்தானை தங்களது எஜமானாக தேர்வு செய்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், உண்மையிலேயே, சாத்தானுடைய சீடனாக நீங்கள் விரும்பினால், ஒன்றுமே செய்யாமல் இருந்தால் போதும். நீங்கள் கிறிஸ்துவை வேண்டாம் என்று சொன்னாலே, சாத்தானை ஏற்றுக் கொண்டது ஆகும். கிறிஸ்துவின் போதனைகட்கு கீழ்ப்படிய மறுத்து, அவருடைய ஒரே உண்மையான சபையில் அங்கமாக மறுத்தாலே, நீங்கள் கிறிஸ்துவை எதிர்த்து, சாத்தான் மற்றும் அவனுடைய கிரியைகள் பக்கம் என்று அர்த்தம்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறி, பின்பு விசுவாசமற்றவர்களானால், உண்மையில் நீங்கள் ஆண்டவருடைய நேர் எதிராளியாகிய சாத்தானின் கூட்டாளி ஆவீர்கள்.

உங்கள் எஜமான் யார்? நீங்கள் யாருடைய பக்கம் இருக்கிறீர்கள்? நீங்கள் யாரை சேவிக்கிறீர்கள்? நீங்கள் இரட்டை நிலையில் இருக்க முடியாதது இது. நீங்கள் சாத்தானை நினைப்பீர் களானால் அவன் உங்களுக்கு வேதனையையும், நித்தியமான அழிவையும் தவிர வேறொன்றையும் தரமாட்டான். அப்படியானால், நீங்கள் கிறிஸ்து வையே உங்கள் ஆண்டவராகவும், எஜமானாகவும் அங்கீகரிப்பீர்கள் என நினைக்கிறேன். உங்களுக்கு கொடுக்க அவரிடம் எல்லாமே உண்டு. அவர் உங்களை பாவத்திலிருந்து எடுத்து, மீட்டு, இந்த உலகில் நல்ல வாழ்வினால் உங்களை ஆசீர்வதித்து, நித்திய வாழ்க்கைக்கான நம்பிக்கையையும் தருவார். ஆனால், நீங்கள், அவரை நம்பி, அவருடைய போதனைகட்கு கீழ்ப்படிந்தால் மட்டுமே அவர் இவைகளை தர முடியும். இது மிக எளிமையானது. நீங்கள் தேவனை நம்பி, கிறிஸ்து அவருடைய குமாரன் என விசுவாசித்து, உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் மன்னிக்கப் படும்படியாக திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெறுவீர்களானால், அவர் உங்களை இரட்சித்து தன்னுடைய சபையில் சேர்த்துக் கொள்வார். (மாற்கு 16:16 ; அப்.2:38,47) பின்பு ஒரு கிறிஸ்தவராக, அவருடைய சீடராக, அவருடைய குடும்பத்தின் அங்கமாக, சபையாக, அவர் உங்களை தனக்கு விசுவாசமாக இருக்கும் படி வேண்டுகிறார்.

ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளும் அவரை ஆராதிப்பது, அவருடைய இலட்சியத்திற்காக உழைப்பது, மேலும் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்வது என்பவைகளை இது உள்ளடக்கும். மாறாக, அவர் உங்களுடன் இருந்து உதவி செய்து, உங்களுக்கான மத்தியஸ்தராக தேவனிடம் சென்று, இந்த உலகத்தின் மிகச் சிறந்தவர்களுடன் உங்கள் ஐக்கியத்தை வைத்து, மற்றவர்களுக்கு உதவி செய்ய உங்களுக்கு உதவி செய்து, உங்களுக்கு சந்தோஷம் கொடுத்து, இந்த உலகை நீங்கள் மிகச் சரியாக மாற்றும்படி உதவுவார்.

உண்மையில், அவரை சேவிக்கிறவர்களுக்கு தேவன் வைத்துள்ள ஆசீர்வாதங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பிக்க வழியே இல்லை. அது ஒரு சிறந்த வாழ்வு! என்னை நம்புங்கள்!

**மேலும் அறிய : ஆவிக்குரிய புத்தகங்களை இலவசமாக பெறுவதற்கு பின்பக்கமுள்ள முகவரிக்கு உங்கள் தெளிவான முகவரியுடன் எழுதவும்.**

**AUDIO NEW TESTAMENT**

**FOR VISUALLY HANDICAPPED**



**பார்வையற்ற நண்பர்களே!**

**இலவசமாக புதிய ஏற்பாடு**

**கேசட் கிடைக்கும்**

*Languages :* Tamil, English, Hindi, Telugu, Malayalam & Kannada

**THE VOICE OF TRUTH**

**INTERNATIONAL ENGLISH MAGAZINE**

**Avail Free World Class Engl Magazine by World Evangelism Team**



WONDERFUL TOPICS ON CHRISTIAN LIVING, EVIDENCES, BIBLE CHARACTERS, WORSHIP, CHRISTIAN HOME, COMFORT AND REASSURANCE, CHURCH AND LOT MORE...

**கிருபையுள்ள வார்த்தை**

**தமிழ் மாத இதழ்**



உலகப்புகழ் பெற்ற போதகர்களின் செய்திகளுடன் உங்கள் வாழ்வை வளப்படுத்தும் கருத்துக்கள். இன்றே உங்கள் பிரதியை எழுதிப் பெறுங்கள்.

**FREE BIBLE COURSE IN ENGLISH**

SYSTEMATICALLY STUDY THE BIBLE FROM YOUR HOME THROUGH CORRESPONDENCE COURSE IN ENGLISH, TO ENRICH YOUR SOUL. WRITE TO US WITH YOUR FULL ADDRESS AND E-MAIL.

**J.C. SCHOOL OF EVANGELISM**

ஊழிய பயிற்சி பெற இலவச அரிய வாய்ப்பு இந்திய மற்றும் வெளிநாட்டு ஆசிரியர்களால் நடத்தப்படுகிறது. விபரங்களைப் பெற உடனே தொடர்பு கொள்ளவும். செல் : 092 4421 4421

**கிருபையுள்ள வார்த்தை**

**தமிழன் T.V.யில்**

செவ்வாய் காலை 7.15 மணி

ஞாயிறு காலை 7.45 மணி

**இமயம் T.V.யில்** புதன் காலை 6.00 மணி



செய்தியாளர் : போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.TH.,
(Director - J.C. Choate School of Evangelism)

**இலவச பைபிள் பாடங்கள்**



வேதாகமப் பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்பியும் தருணம் கிடைக்காத வர்களுக்கு, வீட்டிலிருந்தே அஞ்சல் வழியில் பைபிள் பாடங்களைப் படித்து Certificate பெற அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. உடனே உங்கள் தெளிவான முழு முகவரியுடன் எழுதவும்.

WRITE TO US
WITH YOUR FULL ADDRESS TO RECEIVE MORE LESSONS AND OTHER FREE STUDY MATERIALS

P.C. PHILEMON RAJA, M.A., M.Th.,
DIRECTOR - J.C. SCHOOL OF EVANGELISM
P. BOX 15, ARASARADI,
MADURAI - 625 016.
INDIA PH : 092 4421 4421
E-MAIL US : PCPR@GRACIOUSWORD.ORG
VISIT US AT WWW.GRACIOUSWORD.ORG



# ஜெபத்தின் வல்லமை

**(யாக்.5:13-18)**

THE POWER OF PRAYER



- J.C. Choate (USA)

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்.5:16)

பலவீனமான சகோதரன் முழங்காலில் இருக்கும்போது, அதைப் பார்க்கும் சாத்தான் பயந்து நடுங்குகின்றான். (வில்லியம் கௌப்பெர்)

"இந்த உலகம் கனவு காண்கின்றவற்றைக் காட்டிலும் அதிகமானவை. ஜெபத்தினால் கொண்டுவரப்படுகின்றன" என்று கணித்து உள்ளார், ஜான் வெஸ்லி என்வர்.

நாம் ஜெபிக்க இயலாத அளவுக்கு வேலை மும்முரமாய் இருக்கின்றோம். நாம் வல்லமையைப் பெற்றுக் கொள்ள இயலாத அளவுக்கு மும்முரமாய் இருக்கின்றோம்.

ஒரு மனிதர் ஜெபிக்காதவரையில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் அவருக்குத் (அந்த மனிதருக்கு) தரப்பட முடியாது.

தேவன்தாமே ஜெபத்தினால் ஆழ்ந்த மனப்பதிவைப் பெறுகின்றார். அனனியாவை சவுலிடம் செல்லும்படியாக கூறிய தேவன், "அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்" (அப். 9:11)

"அப்பொழுது கர்த்தர்; நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய் யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு. அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்"

ஜெபத்தைக் காட்டிலும் மனிதனிட மிருந்து வரும் வேறு எதுவும் தேவனுக்கு ஆச்சரியம் உள்ளதாக இருப்பதில்லை.

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவிக் கொடுக்கிறார் என்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறா ரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்." (1யோ. 5:14,15)

உலகத்தை மாற்றி அதை அசைத்த மனிதர்கள் ஜெபிக்கும் மனிதர்களாகவே இருந்துள்ளார்கள்.

V தேவனுடன் பேசுதல்,

V தேவனால் வரவேற்கப்படுதல்,

V தேவனால் பதிலளிக்கப்படுதல் என்பது என்ன ஒரு பயபக்திக்குரிய சிலாக்கியம்!

தேவன் மனிதனுக்கு கூட இணங்கக் கூடும்! இது பலவீனத்தின் அறிகுறி அல்ல. ஆனால் பலத்தின் வெளிப்பாடாக உள்ளது.

ஜெபம் வல்லமையுள்ளதாக இருக்கிறது. ஆயினும் நாம் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவது இல்லை. நாம் தேவன் மீதுதான் நம்பிக்கை கொள்ளுகின்றோம். ஜெபம் சுகமளிப்பதில்லை. தேவன் சுகமளிக்கிறார். ஜெபத்தில் நாம் சர்வ வல்லமையுள்ள தேவனை கூட்டாளியாக்குகின்றோம்.

இந்த அண்ட சராசத்தின் தேவன் நம்மைக் கேட்க, நமக்கு உதவ விரும்புகின்றார்! அங்கு தான் ஜெபத்தில் வல்லமை உள்ளது.

## ஜெபியுங்கள் :

"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கை யிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக். 5:16)

இதை நம்புங்கள்! இதை நடைமுறைப் படுத்துங்கள்.

"எலியா என்பவன் நம்மைப்போலுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை"

"ஜெபிக்கப்படாத ஜெபம்" உள்ளது. ஆனால், "பதில் அளிக்கப்படாத ஜெபம்" என்று ஒன்று ஒருபோதும் இல்லை.

"மறுபடியும் ஜெபம் பண்ணினான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது." (யாக். 5:17,18)

ஜெபம் என்பது தான், தேவனுடைய ஊழியக்காரர்களின் மிக முக்கிய பணியாக இருக்கிறது. முதலாவது ஜெபியுங்கள்!

"அவர் தமது ஜெபங்களில் ஜெபித்தார்" எலியா தேவன் மீது விசுவாசம் வைத்திருந்தார் எனவே ஜெபித்தார்.

உண்மையில், உணர்வுள்ள தன்மையில், விசுவாசத்தினால் எலியா ஜெபம் செய்தார். எலியா ஜெபங்களை கூறவில்லை. அவர் தமது ஜெபங்களை ஜெபித்தார்.

இங்கு விலைமதிப்பற்ற இன்னொரு சிந்தனை உள்ளது. "எலியா என்பவன் நம்மைப் போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்" (யாக். 5:17)

நாம் வேதாகம வீரர்களை "சூப்பர் ஸ்டார்கள்" ஆக்க முயற்சி செய்கின்றோம். தேவன் எலியாவின் ஜெபத்தைக் கேட்டார். தேவன் நமது ஜெபத்தையும் கேட்கின்றார்.

"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (1பேதுரு 3:12)

ஜெபம் 'மிகவும்' பெலனுள்ளதாய் இருக்கிறது. 'மிகவும்' எதிர் 'கொஞ்சம்' ஜெபம் தேவன் மீது செயல்தாக்கம் புரிகிறது!

## தேவன் செயல்படுகின்றார் :

ஜெபம் இந்த உலகத்தை அசைக்கின்ற புயங்களை அசைக்கிறது.

ஜெபம் எவ்வளவு வல்லமை நிறைந்த தாக உள்ளது? எருசலேம் சபையார் ஜெபித்த போது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. (அப். 4:31)

"அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தை தைரியமாய்ச் சொன்னார்கள்."

நாம் கேட்பதற்கும், நினைப்பதற்கும் அதிகமானவற்றை செய்வதாக தேவன் வாக்குதத்தம் செய்துள்ளார். (எபே. 3:21)

ஜெபமற்ற சபையானது வல்லமை அற்ற சபையாக உள்ளது.

ஜெபிக்கின்ற சபை வளராத சபையாக இருப்பதை நீங்கள் ஒருபோதும் காண முடியாது. முதலாவது ஜெபியுங்கள்.

வேதாகமத்தில் நாம் தேவனுடைய 32,000 வாக்குத்தத்தங்களை காண்கிறோம்.

தேவன் மக்களுடன் அன்றாட வாழ்வில் செயல்படுகின்றார்.

ஒரு கிறிஸ்தவரை அவருடைய கால்களில் நிற்கச் செய்வதற்கு அவரை முழங்காலிடச் செய்வதே மிகச்சிறந்த வழியாக உள்ளது.



கிறிஸ்தவர்கள் தங்கள் பிரச்சனை களின் மீது அல்ல. ஆனால், தங்கள் வல்லமை களின் மீது கவனம் செலுத்தியவர்களாகவே வாழ்க்கையை அணுக வேண்டும்.

கிறிஸ்தவர்கள் ஒன்று ஜெபிக்கின்றார்கள் அல்லது அழிகின்றார்கள்.

ஜெபமற்ற (வேதபாட) படிப்புகள், பிரசங்கங்கள் மற்றும் ஊழியங்கள் ஆகியவை பற்றி சாத்தான் பயப்படுவதே இல்லை.

நாம் ஜெபிக்கும்போது சாத்தான் நடுங்குகின்றான்.

**மேலும் அறிய : ஆவிக்குரிய புத்தகங்களை இலவசமாக பெறுவதற்கு பின்பக்கமுள்ள முகவரிக்கு உங்கள் தெளிவான முகவரியுடன் எழுதவும்.**